**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 54/2024**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.த.பாரதி, பலகை எழுத்தர் நிலை –2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரீட்டா | க/பெ.: | தம்பிதுரை |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம். |
| வயது: | 48 | முகவரி: | திருத்துறைப்பூண்டி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.03.2026

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 18.10.2024–ல் மோட்டார் வாகன ஆய்வாளர் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற குறளரசன், த/பெ.அறிவழகன் ஓட்டிசென்ற TN 49 R 3694 என்ற இருசக்கர வாகனமான ஸ்ப்ளன்டர் ப்ளஸ்–ஐ ஆய்வு செய்தார். மோட்டார் வாகன ஆய்வின் போது மேற்படி வாகனத்திற்கு உண்டான, ஓட்டுநர் உரிமம், ஆர்.சி.புக், காப்பீடு ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி வாகனத்தை பகுப்பாய்வு செய்து வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ.1** ஆகும். மேற்படி வாகனத்திற்கு

அபதாரம் செலுத்துவற்கான ரசீது சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

**<u>மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது:–</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.